TAMIL NADU ARCHIVES LIBRARY

Acc.No:	148119
Title:	பாநூர் பாசியாமணி ஈ. அவரர் வெண்பாவந்தாதி.
Vol: —	No: — Month&Year: —
Author:	சோமுசெ. சண்முக முதலியார்.
Year & Publication	1911: காந்தசாமி முதலியார், கிச்சினர் அச்சுயந்திரசாலை.
Call No:	ஓ 23: 417 N11.
Total Pages:	அ+ 24 (22)
Missing Pages:	—
Date of Lamination:	22/12/14
Preservation Clerk Sign:	T. SENTHIL NAYAKI
Remarks(if any):	
Librarian	[signature] 22/12/14

A

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வடதிருமுல்லைவாயில்

ஸ்ரீ மாசிலாமணி ஈசுவரர்

வெண்பாவந்தாதி.

இது,

மதராஸ் பியர் ஆபீஸ் டிராபிக் ஓவர்சியராயிருந்த
மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவான்

மோசூர்-முனிசாமி முதலியாரவர்கள்

குமாரரும்,

பிரசங்கசூளாமணி-க. வ. திருவேங்கட நாயடவர்கள்
மாணாக்கருமாகிய

மோசூர் - சண்முக முதலியாரால்

இயற்றப்பெற்று,

அணைவை - கந்தசாமி முதலியாரால்

தமது
கிச்சினர் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருது௵ ஆனி௴

1911.

Q23:417
N11
148119

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வட திருமுல்லைவாயில்

ஸ்ரீ மாசிலாமணீசுவரர்

வெண்பாவந்தாதி.

விநாயகர்காப்பு.

நேரிசைவெண்பா.

சிந்தா மணிவிளக்கைச் சிந்தூர மாமுகனைப்
பந்தாதிப் போக்கும் பகர்முல்லை—யெந்தாயாம்
அந்தாதி யில்லான் றனக்குமோ ரந்தாதி
நந்தாது சொல்லவிவ ணாடு.

சுப்பிரமணியர்.

வாரணநற் பூங்கொடியான் வாரணனார் மாமருகன்
வாரணத்தைக் கைக்கொண்ட வள்ளன்மகி—ழாரணன்முன்
வாரணத்தி லேயொளிக்கு மாபிளந்த வேலவன்றாள்
வாரணத்தி சந்ததமும் வாழ்த்து.

ஆளுடையபிள்ளையார்.

வீழியிதழ் மாதென்னை விள்ளரிய பெண்ணாக்குங்
காழிவரு ஞானக் கவுணியனைப்—பாழிசெறி
பூவடிநன் கேத்துமெற்குப் புன்பிறவி நீக்கமுடன்
பூவடியி லோங்கும் புகழ்.

ஆளுடையவரசு.

நஞ்சமதைக் கண்டஞ்ச நாரணனு நாணுறவே
நஞ்சமுண முண்டுதிகழ் நாவரசைத்—தஞ்சமெனச்
செஞ்சரண மென்றலையிற் சேர்த்திட்டேன் வெங்காலற்
கஞ்சுவனோ வின்ன மயர்ந்து.

ஆளுடையநம்பி.

அம்பரவை யிற்றுயிலு மச்சுதனுங் காணுனை
நம்பரவை யிற்றாது நாடிவிடும்—நம்பரவை
பேணுத் துதிக்கும் பெருந்தகையை யேத்தியெவர்
காணுக் கதிபெறுவேன் காண்.

ஆளுடையவடிகள்.

ஆணிப்பொன் னம்பலவ னன்றெழுதக் கோவைதனை
மாணிக்க மாரியென வாய்மைமொழி—பேணியிவண்
பெய்தப் பெருந்தகையைப் பேசுவேற் கேதுகுறை
யுய்யவரு ளெந்தையென் றோர்ந்து.

நரிமகளார்.

நாடு முலகெங்கு நண்ணுமுயிர் நாவுதொறும்
பீடுபெற மேவும் பெருந்தகையா—டேடியென
துள்ளக் கமலத்தி லுற்றனளிங் குய்ந்தேனன்
பிள்ளையெனக் கொண்டே பெரிது.

ஆசிரியர் வணக்கம்.

முந்தைவினை வேரறுத்த மூதறிவோர் கொண்டாடும்
எந்தைதிரு வேங்கடனை யென்னெஞ்சே—சந்ததமும்
வாளுட ரேத்தும் வடமுல்லை யந்தாதி
தானேங் கிடப்பணிவாய் தாழ்ந்து.

அவையடக்கம்.

தண்கடனீ ரைக்கலக்கித் தங்குமச்சந் தான்பிடிக்க
வெண்கடவார் [illegible]ப்பைதனை யேற்குமே—யொண்புக
தேன்பாடுஞ் சோலைத் திருமுல்லை யந்தாதி [ழ்சேர்
யான்பாட லுற்ற விது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

வடதிருமுல்லைவாயில்

ஸ்ரீ மாசிலாமணீசுவரர்

வெண்பாவந்தாதி.

வரசித்திவிநாயகர்.

நேரிசைவெண்பா.

முக்கட் பரஞ்சுடரை மூடிகமூ ரைங்கரனைச்
செக்கர்த் திருமேனிச் செல்வனையே—தக்கமுல்லை
யோங்கும் வரசித்தி யும்பன்முகத் தோனைவினைத்
தீங்கறவே யேத்திடுவேன் றேர்ந்து.

நூல்.

நேரிசைவெண்பா.

பூவேறு கோனும் புரந்தரனும் போற்றிசெயச்
சேவேறு மாமுல்லைச் சேவகனை—நாவேறு
பாவாற் பதமலரைப் பாடாமற் போயினையே
ஆவாவென் னெஞ்சே யறை. (க)

அறையோத்தி னந்தரமு மாகமத்தி னீறுந் [மிசை
துறைகண்டார் போற்றுமுல்லைத் தோன்று—மறையின்
மீண்டுவா ராதகதி மேவுவிக்க நாயேனை
யாண்டருளி யீவா யிசைந்து. (உ)

அறிந்தாரே வாழ்வனைத்து மண்டுவரே யல்லார்
பிரிந்தாரே யாவர் பெரிதுஞ்—சிறந்த
விதிவிதியி னேத்தி விழாவெடுத்த மூல்லை
யதிபதியின் செம்பொன் னடி. (௩)

அடியா ருலகளந்த வச்சுதனும் போற்றச்
செடியார் வினையினை முன் செற்றக்—கடியாரும்
வண்டறையுங் கொன்றை வடமுல்லை மாமணியைக்
கண்டடையா வாறென் கழறு. (௪)

கழறுமறை காணரிய கண்ணுதலை நாளுங்
குழுமிதொழு வாரடியைக் கூறும்—விழுமிய
தொண்டர்க்கு மேற்பதவி தோன்றிடவே நற்கருணைக்
கொண்டருளு மாமுல்லைக் கோ. (௫)

கோகனகத் துற்றவனுங் கோகனகற் செற்றவனு
மாகனக மென்றேத்து மாமணியா—மேகனையே
வந்தவினை மாய வடமுல்லை மாநகரிற்
சந்ததமுங் கைதொழுது சார். (௬)

சாராதே சாலநாள் சங்கடத்திற் காளாகி
யோரா வுனையடைந்தே னுத்தமனே—யேராரு
நாகமணி மாமுல்லை நாயகனே நிற்பணியு
மோகமுற வர்தருளொன் முன். (௭)

முன்னைத் தவப்பயனோ மூடனிவ னென்றறிந்தோ
கன்னவென வோங்குங் கவிபாட—நன்னயமாய்த்
தந்தாய் வடமுல்லைத் தாதா * மனுநிதனே
நந்தாகைம் மாறறியே னுன். (௮)

* மனுநீதன் என்பது மனுநிதன் என்றானது குறக்கல்.

நானுரென் னுள்ளமார் ஞாயங்க ளாரென்னுந்
தேனுரு நற்பனுவற் றேர்ந்திடா—தானுருந்
தேகந் தனையெடுத்தேன் றேசார் கொடியிடைகொள்
பாகத்தாய் வந்தருள்வாய் பார்த்து. (௯)

பார்த்தவிட மெல்லாம் பரவெளியா முல்லையர
வார்த்தியுடன் காணு மன்பரவர்—சீர்த்திசெறி
செங்கமலத் தாடனையே சிந்திக்கில் வெம்பிறவி
பங்கமறும் மென்பர் பரிந்து. (௧௦)

பரிந்தணிந்த திங்களும் பாம்பும் பகைமை
யிரிந்துறையச் செய்யுமுல்லை யீசா—விரைந்துகொடுஞ்
சண்டனொடுநான்முகனுஞ் சார்பகைமை நீக்கியெனைத்
தொண்டனெனக் கொண்டிடவே தோன்று. (௧௧)

தோன்றுசன னங்கொடாறுந் தொல்புவியிற்றாய்மார்கள்
ஈன்றுதரும் பாலனைத்து மீடாக்கி—லான்றவர்தேர்
நீண்டதிரு மாலுறங்கு நீள்கடலுந் தான்சிறிதா
மாண்டபுகழ் முல்லைமன்ன’வா. (௧௨)

வாழ்த்தவருள் செய்வானே வாரணிந்த மாதர்மயற்
றாழ்த்தவுளங் கொள்ளுவனே தானறியேன்—காழ்த்த
திடமாரு நற்கதியைச் சித்ரகர்மற் றீந்த
வடமுல்லை மாநகரான் வந்து. (௧௩)

வந்துயிலு மாசுணத்தை வாகா யணிமுல்லைச்
சிந்தனைய நற்கருணைச் செல்வனே—மைந்தனையிங்
காளா விடிலெனக்கா ராதரவு கஞ்சமலர்த்
தாளாநீ வந்தருளைத் தா. (௧௪)

தாரணியும் பொன்னுங் தருமில்ல மீன்றோரும்
வாரணிந்த மாதரரும் வாழ்க்கையு—மேரணிந்த

மண்ணொடுவிண் ணின்பும் வடமுல்லை வாயினில்வாழ்
கண்ணுதலான் செஞ்சரணங் காண். (௧௫)

காணமொடு பெண்ணுங் கருதியே நிற்பணிந்து
பேணவறி யாதிருந்தேன் பேதமையே—னீணிலத்தின்
மாசடையா ரேத்துமுல்லை மாசடையாய் சுந்தரர்க்குக்
காசடைவா யீந்தவனே கா. (௧௬)

* காரிசங் கந்தரிகைக் கண்ணன் மகிழவலப்
பாரிசங் கந்தரையின் பார்வதியை—வாரிசப்
போதலரு நற்றடஞ்சூழ் பொங்குபுகழ் முல்லையினிற்
காதலுடன் வைத்தவபார் கண். (௧௭)

கண்மணியே யெங்கள் கறைக்கண்டா முல்லைவளர்
விண்மணியே யென்று வியந்தோதி—நண்ணுமொரு
சுற்பனைக்கு மெட்டாத கண்ணுதலைத் தொழுநேரா
வற்பரைநீ கண்டிடவே யஞ்சு. (௧௮)

அஞ்சுவணத் தானேடிங் கஞ்சுவணத் தானறியா
வஞ்சுவணத் தான்முல்லை யுற்புதனைத்—தஞ்சமென
நத்துவையே ஞானகமை நாடா னமனறிதி
வித்திலர்க் கென்னும் விளைவு. (௧௯)

விளைவார் கழனி வியன்முல்லை மேவுந்
தனியோங்குந் தற்பரற்குச் சாற்றவில்லை—களியாற
மருவியென் னேடிருக்க மாதனமார் தோழி
மருமலர்பூஞ் சோலைசெறி வண்டு. (௨௦)

வண்டறையுங் குல்லையணி மாலயனு மாமறையுங்
கண்டறிய மாட்டாத கண்ணுதலைப்—பண்டமரர்
கோலமுறு முல்லையிலே கோதறுசீ ரென்றேழி
மாலையிட வென்வசமா மா. (௨௧)

---

* காரி - இந்திரன்.

மாதங்க வில்லுடையாய் மாதங்க நல்லுடையாய்
மாதங்கத் தேவைத்த மன்னவனே—யேதங்கள்
போக்கி வடமுல்லைப் புங்கவனே நின்னடிக்கி
னாக்குவா யென்னையுநல் லாள். (௨௨)

ஆளடிமை செய்யவெனை யண்டினா னெம்பெருமான்
றாளடிமை கொள்ளமனந் தாங்கினேன்—வேளுரிமை
மாங்குயில்கண் மாதர் வளங்கிளவி தாம்பயிலுந்
தேங்குபுகழ் முல்லைவனத் தே. (௨௩)

தேசுறுநற் சம்பந்தர் தேங்குபுக ழப்பரிவர்
வாசகத்தை நீமகிழ்தல் வண்மையோ—பேசுமொரு
பிள்ளையுரை யோபேசாப் பிள்ளையுரை யோமகிழ்வு
கொள்ளுமனை முல்லையாய் கூறு. (௨௪)

கூறுபுகழ் வேண்டிற் குவலயமெச் சுங்கல்வி
தேறுபெற வேண்டிற் றிதிவேண்டில்—வேறுபடும்
பழியிலென் றாழ்போற்றப் பார்வைதனை யீயுஞ்
செழுமுல்லை வாயிலுக்கே செல். (௨௫)

செல்வ நெடுமாடஞ் சென்றுசே ணோங்கியே
செல்வமதி தோயுஞ் செழுமுல்லைச்—செல்வனையே
யல்லும் பகலு மணுகியடி யேத்துவையேல்
செல்லும் வினையனைத்துஞ் சேர்ந்து. (௨௬)

சேர்ந்தபல வல்வினையைச் சேதித்துத் தன்னடியை
யார்ந்தபுக ழோடேத்த வாதரிப்பான்—றேர்ந்தமரர்
கோன்பணியும் வந்திறைஞ்சக் கோதிலரு ளன்றளித்த
வான்முல்லை வாயினில்வாழ் வான். (௨௭)

வானே முதலாமெண் மன்வடிவ மாய்ப்புணர்ந்த
கோனே வடமுல்லைக் கோமளமே—தேனேயு

முல்லைமலர் கொண்டேத்த முன்கரியின் சாபமற
வொல்லையருள் வாய்வினையை யோட்டு. (௨௮)

ஒட்டுவித்தால்வெவ்வினைகளோடாவோவென்னெஞ்சே
யாட்டுவித்தாற் பல்லுயிரு மாடாவோ—நாட்டமுடன்
§ அல்லால முண்டா னருமுல்லை வாயிலமர்
கல்லால னுத்தமன்பேர் கல். (௨௯)

கல்லனைய நெஞ்சேன் கழலடிணை யேத்திடுநற்
சொல்லறியே னாயிடினுஞ் சோதிமயத்—தில்லைவளர்
மன்றனைய முல்லை மணிவிளக்கே நிற்பணியு
மென்றனக்கு முண்டோ விடர். (௩௦)

இடர்வரினு மாறு விருஞ்செல்வம் வந்தே
யடருறினு மில்லாமை யண்டிப்—படர்செயினுங்
கல்லைவில் லாக்கொள்ளுங் காமாரி முல்லைவனத்
தெல்லைவிட்டு நீங்கா திரு. (௩௧)

இருந்திடினு நின்றிடினு மெல்லதளிற் றுஞ்சற்
பொருந்திடினு மன்னம் புசிக்கின்—றிருந்திழையார்
போகத்தே மூழ்கிடினும் பொன்முல்லையாயென்மனநின்
பாகத்தே நிற்கப் பணி. (௩௨)

பணிவா ரிருள்போக்கப் பானுவென நின்ற
வணியாரு முல்லை யரனை—நணியேத்தில்
வன்பிறப்பு நீங்குநமை வாரிதிபோல் வந்தடருந்
துன்பிறக்குங் கூடுஞ் சுகம். (௩௩)

சுகக்கடலே ஞானச் சுயஞ்சுடரே முல்லை
யகத்துறையிற் சேரே னனகா—விகலறவே

---

§ அல் ஆலம் எனப் பிரித்துக் கரியவிஷம் எனப் பொருள் கொள்ளவேண்டும்.

சந்ததமுஞ் சார்ந்திடுவர் சந்தமுறு மாமறையோர்
முர்தவழி பெய்தேமுத் தீ. (௩௪)

தீய குறும்பர் தியக்கமற வேந்தியலை
மேய திரையனுக்கு வேண்டியரு—டேயவனே
நீடு மறைமுதலாய் நிற்கும் வடமுல்லைவாய்
வாடுமெனை யாட்கொள்ளா வாறு. (௩௫)

வாறுபெற நற்றவத்தோர் வந்துபணி மாமுல்லை
யாறணிந்த வேணிகொளு மற்புதனைத்—தேறுதலி
லொன்னார்புரம்பொடித்த வுத்தமனேயென்றொருகாற்
சொன்னாலிங் கேகுந் துயர். (௩௬)

துயரான யாக்கையினைத் துன்னார் மடவார்
அயர்வான வாழ்க்கைதனை யண்டா—ருயர்வான
விண்ணுலகம் வேண்டார் வியன்முல்லைத் தூமணியாங்
கண்ணுதலார் நல்லடியார் கண்டு. (௩௭)

கண்டனைய சொல்லுங் கவினா ரிருவிழியுங்
கொண்ட கொடியிடையாள் கோமானே-பண்டைவினை
பாற்றி யருள்புரியப் பாராம னீயிருந்தால்
மாற்றுவரா ரிவ்வுலகின் மன். (௩௮)

மன்னியசீ ரோங்கும் வடமுல்லை மாமணியே
யுன்னியெனை யாள வுகந்திலையே—பன்னரிய
நண்பு பெறுபிருகு நண்ண மணிமழையைப்
பண்புபெற பெய்வித்தாய் பண்டு. (௩௯)

பண்டுகா குத்தன் பரிமகத்தைத் தானியற்றக்
கண்டுதுயர் செய்த கலைதீர—வண்டிகிதங்
கான்மலரை யேத்துங் கவின்குசல வர்க்கருளும்
பான்மைபெறு முல்லையனைப் பற்று. (௪௰)

பற்றுவிடா தென்றும் பழம்பொருளென் றேத்துமவர்
குற்றங் குணமாகக் கொண்டருளு—முற்றறிய
நன்னிதியம் போல நயந்ததிரு முல்லையான்
சந்நிதியி லூதுதிருச் சங்கு. (சஉ)

சங்கர வம்புலிசேர் சச்சிதா னந்தமழு
வங்கர வம்புலியை யார்த்தவனே—பொங்கரவம்
பூணு யணிந்த புகழ்முல்லையாய் புங்கமறை
காணு மரைக்கழலைக் காட்டு. (சஉ)

காட்டைத் திருத்திமனக் கள்ளமற வன்பதனை
காட்டியருண் முல்லைவளர் நாயகசே—ணாட்டினர்தம்
மன்றற் குழன்மடவார் மங்கலநாண் பெற்றிடவே
யன்றுவைத்தாய் கந்தரத்தி லல். (சங)

அல்லலுற விக்கி யடிகுளிர்ந்து பற்கிட்டக்
கொல்லவருங் கூற்றங் குறுகாமுன்—முல்லைவளர்
அஞ்சக் கரத்தானே டஞ்சக் கரனறியா
வஞ்சக் கரத்தானை யண்டு. (சச)

அண்டமெலா மோர்குடைக்கீ ழாளுமர சச்செல்வஞ்
சண்டன்வச மாம்போது சாருமோ—மண்டுங்
கருவாச மில்லாக் கவின்முனியாய் நின்ற
திருவாச ருக்கருள்வாய் சொல். (சரு)

சொல்லரிய வேந்தர் தொகுமுற்ற நற்றளிமா
வல்லியம் மேவும் * வடமுல்லையே—நல்லியலார்
சுந்தரவல் லானுளுஞ் சோதிமலை மேவவருள்
கந்தரவல் லானுளுங் காப்பு. (சசா)

---

* முல்லையே என்பது தொகுத்தலாய் முலையே என்றாயிற்று.

காப்புடையார் முல்லை கவின்பணியுந் தோற்றுரும்
பாப்புடையா ரேற்றருளும்பண்ணவனை—மாப்புவியில்
சுற்றத் தினர்குழுமிச் சூழ்ந்தழா முன்னெஞ்சே
பற்றில்வரு மேபரம வீடு. (௪௭)

வீடகத்தைக் காமுறுவோர் வேண்டி நிதமிறைஞ்ச
வாடக மன்றோங்கு மாரமுதே—கோடகமில்
வண்டமருஞ் சோலை வளம்பெருகு முல்லைநகர்
கண்டவர்க்கு முண்டோ கலி. (௪௮)

கலிக்குஞ் சிலம்பணியுங் கஞ்சத்தோற் கல்லாற்
சலிக்குமென் சொல்லியொன் சாரும்—பலிக்கும்
ஒருமுல்லை கொண்டேத்த வொண்கதியிற் சேர்க்குந்
திருமுல்லை வாயிலான் சீர். (௪௯)

சீர்சான்ற நற்றவத்தோர் சிந்திக்கு மாமுல்லை
யேர்சான்ற தூமணியை யென்னெஞ்சே—கார்சான்ற
தீவினையிங் கோடத் தினந்துதிக்க வெண்ணுவையேல்
பாவினையோ டேத்தலே பண்பு. (௫0)

பண்புணரார் காணார் பதயங் கயமலரைக்
கண்புணரு மேலாங் கருமணியே—விண்புணர்கற்
செஞ்சிலையாய் முல்லைச் செழுங்கரும்பே பச்சிலையிட்
டஞ்சலிப்பார்க் கேயருள்வை யால். (௫௧)

ஆலமதை முல்லை யரனருந்த வெண்ணிலனேல்
ஓலமிடு தேவ ருயர்வெங்கே—மாலுடனே
சீலவிதி யெங்கே சிறகறுத்தோன் வாழுமனு
கூலமெங்கே போமோ குறித்து. (௫௨)

குறித்தனது வைந்தெழுத்தைக் கூறுதேன் றீங்கைப்
பறித்திடிலிங் கார்தடுப்பார் பாரி—னிறத்தகொடி

யாடும் புரிசை யணிகோ புரந்திகழும்
பீடுசெறி முல்லையாய் பேசு. (௫௩)

பேசுமயன் மூன்றும் பிரிந்தடியே னென்மறைத்தேன்
மூசுபத மேத்து முறையருளப்—பாசுபதா
வானாத வாழ்வதனை யன்பர்க் கருண்முல்லைக்
கோனேயிங் கேதோ குறை. (௫௪)

குறையுளதோ வின்னங் கொடிமதில்சேர் முல்லை
யிறைவனையிங் கோதி யிறைஞ்சிற்—பறைகொட்டி
நீராட்டிக் கட்டையிலே நீட்டிப் பிணமென்று
பாராட்டு முன்னேயப்பா. (௫௫)

பாரதனி லென்பவநோய் பாறவருள் செய்திலையாற்
றேரமரும் வீதிமுல்லைச் செல்வனே—நீரமரு
நாரா யணனே நலத்தபர மென்றவனைப்
பாரா துதிர்த்தனையே பல். (௫௬)

பல்லுயிர்க டோறும் பரவுமெள்ளு மெண்ணெயைப்போல்
சொல்லுகலை தோறுந் தோன்றிடுவா—னல்லபெருஞ்
சங்கினங்கண் முத்துயிர்க்குந் தண்வயல்சூழ் முல்லைநகர்த்
துங்கவனே யெற்குத் துணை. (௫௭)

துணையே படிறனேன் றொல்பிறவி சீக்கும்
புணையேநன் முல்லைப் புனிதா—வினையிறந்த
வொன்றே தொழும்ப ருளத்துறையும் பூரணமே
யென்றே யெனையாள் வது. (௫௮)

அதுலவடி வேமுல்லை யம்பதியி னுஞ்
சிதலமுறு தோங்குஞ் சிவமே—பதம்பணியு
நல்லவரை நாடி நயந்தமுக மன்கூறித்
தொல்லுலகிற் செய்வனோ தொண்டு. (௫௯)

தொண்டைமா னுக்கருளுந்தோன்றலேசெவ்வாய்கொள்
தொண்டைமா னுக்கருளத் * தோன்றுதோ—வண்டர்புகழ்
பற்குனற்குப் பாசுபதம் பாங்கா யருண்முல்லை
நற்குணனே சற்றே நவில். (௫௦)

நவிலரிய செவ்வேண்மு னடிநினை யேத்த
வவிர்புகழோ டோங்கவரு ளத்த—புவியதனி
னேக்கமுடன் முல்லைவளர் நுண்ணறிவோய் வன்பிறவி
யேக்கமற வந்தருளெற் கே. (௫௧)

ஏமனையும் பூமனையு மேய்க்கும் வலம்பெறலாங்
காமனையிங் கோட்டுங் கனமுறலா—மேம
முருகவாம் வண்டுபல மூசுபொழின் முல்லை
முருகவா விப்படிந்து மூழ்கு. (௫௨)

மூழ்கி வினைக்கடலின் மூதறிவி லாதவெனைக்
காழ்கிளருஞ் சேவடியைக் காட்டாயோ-கேழ்கிளருஞ்
செஞ்சடையாய் முல்லைநகர்த் தேசுறுநன் மாமணியே
யஞ்சலென வாதரித்தே யாண்டு. (௫௩)

ஆண்டானை முல்லைவள ராரமுதை மாபலிக்கா
நீண்டான்ற னென்பணிந்த நித்தியனை—வேண்டாத
தக்கனரும் வேள்வி தகர்த்திடுநற் றன்மையனை
நக்கனா ரைத்தினமு நாடு. (௫௪)

நாடகிலே னின்னடியர் நற்சீர்ப் பதமலரைப்
பாடகிலேன் முல்லைவளர் பண்ணவநிற்—றேடகிலேன்
ஏனோ பிறந்தேனிங் கின்றவளுக் கோர்சுமையாய்
கோனேயித் தேகத்தைக் கொண்டு. (௫௫)

---

* எண்ணம் என்பதை வருவித்து எண்ணந் தோன்றுதோ என்க.

கொண்டனிறக் கூற்றுவனர் கூடுஞ் சமயமாய்ப்
கண்டமதி லையங் கலவாமுன்—னெண்டகுசீர்
சம்புதா சற்கருளுஞ் சங்கரன்வாழ் முல்லைநகர்
நம்பிதா வைத்தொழுத னன்று. (சுசு)

நன்றான முல்லைக்கு நாயகனென் றேமேனாள்
குன்றாக் கொடியிடைச்சிக்கொண்டனையே—மன்றாடும்
மன்னே மணியே மறைக்கொழுந்தே மாதவர்தம்
பொன்னேயிப் போதே புகல். (சுஎ)

புகலுமதிக் கேய்ந்தடரும் புன்சாபம் போக்க
விகலின்மூ வேழ்*கனிக ளெண்ணித்—திகழ்முல்லை
நாற்றக் கொடியிடையா னல்லருளைப் பெற்றனரவ்
வேற்றமுற மேவிடுமோ வெற்கு. (சுஅ)

குண்டலவ னுக்குக் குருமனைவி சேர்தலினாற் [மிழோ
கொண்டக் கயப்பிணியைக் கொன்றதுபோல்-வண்ட
ரேத்தும் வடமுல்லை யெந்தையே யென்பவநோய்
மாற்றியருள் செய்தலலோ மாண்பு. (சுகூ)

மாண்புபெறு நாவலூர் வன்றொண்டர் தாமிசைக்குஞ்
சேண்புணர்சீர் நற்பனுவற் செல்வனை—மேண்புணரும்
வானோர் பணிமுல்லை வாசன்மலர்த் தாளிணைநீ
தானேத் தலைசுந் தரம். (எ0)

சுந்தரநற் றொகையருந் தொண்டருமே சந்நிதியில்
வந்தனமே பண்ணும் வடமுல்லையே—விந்தையுற
வேதக்§கனியளித்தாரும்பன்முகத் தோனிவர்க்குச்
சூதக் கனியளித்தார் தோய்வு. (எக)

---

*கன்னிகள் என்பது இடைக்குறையாய்க் கனிகள் என்றாயிற்று.

§ கன்னி என்பது தொகுத்தலாய் கனி என்றாகி அது சூதக்கனியளித்தார் என்னுங் குறிப்பாற் காரைக்கால் அம்மையாரை யுணர்த்தியது.

தோய்ந்தின்ப வாரிதியிற் றெண்டுபுரித்தொண்டையனை
யாய்ந்துகளிற் றைத்தடுத்த வத்தனே—வாய்ந்தவென
தாங்கார மென்னு மனார்க்கரியைச் சங்கரித்தே
தீங்கோட வேயருளிச் செய். (எஉ)

செய்யதிரு முல்லைநகர்ச் சென்றுமதி வாவியிலே
பையக் குடைந்தாடும் பண்புடையோர்க்—கையமற
பேய்போம் துயரம்போம் பித்தம்போம் போகாத
நோய்போகு மென்றே நுவல். (எஙு)

நுண்ணறிவார்மெய்ஞ்ஞான நூலோர்க்கும்வேய்க்கரிய
வண்ணமணி முத்திவரும் வண்முல்லையே—தண்ணமருங்
கங்கைதலை யேற்றினார் கல்லார் புரமழித்த
சங்கைதலை யேற்றினார் சார்பு. (எச)

சார்புறுபூஞ் சூதமுஞ் சாம்பிணியோர் தம்மெய்யும்
ஆர்ந்த வடுத்தவிரு மம்முல்லையே—நேர்ந்தவிடத்
தெண்ணாக் குவிக்க வெழில்குழலா தம்மொருவன்
நண்ணாத் திறத்தா னகர். (எரு)

நகர்நடுவோ நாடோ நலஞ்சாராக் காடோ
சகடே யுடலமது சாய்த—னிகழாமுன்
மல்குபுக ழார்முல்லை மாதவனே நிற்போற்ற
நல்கிடுவாய் நாயேற்கு நார். (எசு)

நாரிலா மாலையணி நாயகனே நின்னடியை
நாரிலா தெவ்வணநா னாடுவேன்—வேரிமுல்லை
வில்லமணிந் தாய்தேவ மித்திரனைத் தொல்பிறவி
செல்லகதி தந்தாய்நீ செப்பு. (எஎ)

செப்போ பொருப்போ செழுந்தனமென் றேந்திழை
கொப்போதி யேகெட்டவுன்மத்த—னிப்போதிங்[யாற்

கப்பணியும் வேணிமுல்லை யண்ணலடி யேசார்ந்தேன்
றப்பேது மில்லையே தாழ்ந்து. (எஅ)

தாழ்ந்தசடை யாடத் தமருகமுந் தானுட
வாழ்ந்த பதஞ்சலியா ரார்காட—வாய்ந்தமுல்லைக்
கண்ணுதனீ யாடுநடங் காண்பார்க்கே யிவ்வுலகி
னண்ணுமா ஞானத் திரு. (எகூ)

திருத்தகுசீர் மேவுந் திருமுல்லை யெந்தா
யொருத்தனையிங் காளாதென் னைப்போ-வருத்தியொ
மாகண்டத் தானமெலா மன்னரிய நிற்போற்ற [டு
வாகண்ட லற் * கருள்வா யாய்ந்து. (அ0)

ஆய்ந்தகரை யான்புற்று மானகான் யாறுநித
மேய்ந்த வரவமரு வேண்முல்லையே—வாய்ந்த
மதலையணி வார்மாய்த்த வன்கரவால் பின்னு
மதலைதரு வார்க்கருள்வார் வாழ்வு. (அக)

வாழ்வுதரு செல்வமுளார் வாயிறொறுஞ் சென்றுநிதந்
தாழ்வுபடு நெஞ்சே தனிமுல்லைக்—காழ்சடையோற்
போற்றில்பதி னாறுய்ப் புகல்பேறுந் தந்துபினர்
மாற்றியருள் வான்பிறந்தை மாசு. (அஉ)

மாசின் மணியென்றே மன்றொண்டை மானின்னை
வீசினன் வாள்கொண்டு வித்தகா—பேசறியேன்
கங்கைதலைக் கொண்டுமுனங் கர்வித் துழல்விதியின்
கங்கைதனிற் கொண்டவசெங் கை. (அங)

கையமர்வீ ரர்வாளுங் காதலித்தோர் நற்புகழும்
வையகமே யோங்கும் வடமுல்லையே—பையமருங்

* அருள்வாய்என்பது இறந்தகாலத்தில் எதிர்காலம் வந்து மயங்கியவழு வமைதி.

தொண்டைக் கனிவாயார் தோகையுமை யாண்மகிழு
மிண்டைக் கனிசடையா ரில். (அச)

இல்லமரும் பூவையர்க ளேந்துமுலை நற்றேளில்
வல்லமையே காட்டும் வடமுலையே—வில்லமரும்
வேணியிலே வேணிவைத்த வித்தகனுர் வீடருளும்
ஆணிப்பொ னம்பலத்த ரார்வு. (அரு)

ஆர்ந்தவிழி பஞ்சடைய வண்டையிலே நின்றோர்கள்
ஓர்ந்துபய னில்லையென வுன்னுமுனே—தேர்ந்துநித
மாணுர் புகழ்நிறையு மாமாசி லாமணியை
யேணுரு முல்லையிலே யேத்து. (அசு)

ஏத்தும் வகையறியே னெம்பெருமா னுன்பெருமை
போற்றும் வடமுல்லைப் புங்கவனே—சாற்றுங்கால்
ஆயிரநா வானு மரற்றவலி யற்றனனே
லேயவெனு லாமோ விசை. (அஎ)

இசையாரு முல்லை யிரும்பதியின் மேவும்
வசைதீருந் தூமணியே வாகாய்—நசைநீக்கு
மாலமர்ந்தோர் நால்வர்க்கு மன்றளித்த மோனநிலை
மாலமர்ந்தோ னுக்கருளாய் மற்று. (அஅ)

மற்றுன் னருளன்றி மாநிலத்தி லெப்பொருளுஞ்
சற்றுமசை யாதென்னுஞ் சத்தியத்தை—முற்றுணர்தல்
பாலாம் வணீற்றுப் பஞ்சக் கரன்முல்லைக்
காலாந் தகனடியர்க் காம். (அகூ)

காஞ்சனத்தை * நீத்தவருங் கானவரு மாதங்க
வாஞ்சை மறந்திகழும் வண்முலையே—நாஞ்சில்
அலம்பகமார் பண்ணை யருமணிசேர் போரூர்ச்
சிலம்பகனுர் தாதை செறிவு. (கூ0)

* நீ-நீத்தலையுடைய தவரும் தவசிகளும்.

செறிவாரு மத்துவிதச் சித்தாந்தத் தன்மை
யறிவோங்க வெற்கருள்வா யண்ணல்—புரிமுல்லை
வண்டாருந்தொங்கலணிவா மனனார் பின்னெனும்பைத்
தண்டாமற் கொண்டனைமுன் றண்டு. (௬௧)

தண்டடமார் கஞ்சத்துங் தங்குமனை தன்னினுமே
வண்டனமே மேவும் வடமுல்லையே—மண்டுவனப்
பட்டிகையைக் கொண்டார் பருதனத்தர்மாதரிடைப்
பட்டிகையைக் கொண்டார் பதி. (௬௨)

பதிநியமஞ் செய்திடுநற் பண்புடையார் சேரக்
கதியுதவ முல்லைவளர் கண்ணே—துதிபுரியக்
கற்பகத்தே மேவிடினுங் காணிரயஞ் சென்றிடினும்
மற்பகத்தே நிற்க வருள். (௬௩)

அருள்படுமெய்ஞ் ஞானமய வம்பலத்தி லாடு
மிருள்படுகண் டத்தெம் மிறைவ—தெருள்படவே
எங்குடியை யாண்டா யெழில்முல்லை மாமணியே
வங்கமலை யாயறியேன் மாறு. (௬௪)

மாறுபடா நற்கருணை வாரிதியை மாமுல்லை
நீறுபடு மேனிகொளு நித்தியனைத்—தேறுமவ
ரஞ்சுவரோ காலற்கிங் கண்டிவரின் மார்க்கண்டன்
விஞ்சுகதை செய்பாரோ விண்டு. (௬௫)

விண்டுபதஞ் சார்ந்தவரும் வேதனிடஞ் சேர்ந்தவருங்
கண்டுதொழ வேண்டுங் கவின்முல்லை—யண்டர்பிராற்
காளாகார் நாளைவரு மந்தகற்கென் செய்வாரோ
மீளா நரகடைவார் மீண்டு. (௬௬)

மீண்டுமீண் டிவ்வுலகின் மேவாம னாயேனை [ஞ்
யாண்டருள்வாய் முல்லைவளா ராரமுதே—வேண்டிநித

செங்கமலத் தாளேத்த சீர்வட்ட மீந்தபர
மங்கலற வுண்டாற்கு மண். (கூஎ)

மண்டுபூஞ் சோலையிலு மன்னர்மனை முன்றிலிலும்
வண்டர்பண் பாடும் வடமுலையே—தண்டலிலாத்
தூதுளவ னத்தன் றுரியமறைத் தாட்கமலப்
போதுளவன் றட்டான் புரி. (கூஅ)

புரிசடையும் பாம்பும் புலித்தோலுந் தோன்றப்
பரிவிலருள் செய்தேயிப் பாரில்—விரிபொழில்சூழ்
தேராரும் வீதித் திருமுல்லை யாய்வினையை
வாரா தொழிந்திடவே வாட்டு. (கூகூ)

வாட்டும் பிறந்தையறு வண்ணமே யென்முடியிற்
சூட்டியரு ளெந்தாயித் தொல்புவியி—னூட்டமுட
னன்னம் பயின்முல்லை யானே யரவுதொழப்
பொன்னம் பலத்தாடும் பூ. (க00)

வாழி.

நேரிசை வெண்பா.

முல்லையான் றேவி முருகன் கணபதியும்
வல்ல வடியார்கள் வாழிநிதம்—நல்லவெண்பா
வந்தாதி யக்கமணி யஞ்செழுத்து வெண்ணீறு
சிந்தாது வாழியெனச் செப்பு.

முற்றிற்று.

தலமான்மியம்.

இத்தலம் தொண்டைநாட்டு முப்பானிரண்டு க்ஷேத்திரங்களுள் ஒன்று. சென்னைக்கு மேற்கில் 10-மயிலிலும் அம்பத்தூர் ஆவடி ஸ்டேஷன்களுக்கு முறையே 2-3, மயில்களிலுமுள்ளது. மிக்க தெய்வீகமுடையதும், அன்பர்கள் வேண்டிய சித்திகளை எளிதில் பாலிக்கவல்ல இலதாமத்யாம்பிகாசமேத நிர்மலமணீசுவரர் வீற்றிருப்பதுமானது. இங்குப்பெருமானுக்கும், பெருமாட்டிக்கும், தலத்திற்கும் பல திருநாமங்கள் வழங்கும். அவற்றைக்கீழே குறிப்பாம்.

இத்தலத்திற்குக் கிருதயுகமுதல் துவாபரயுகம் வரையும் கல்யாணபுரம், ஸ்திரக்ஷேத்திரம், பிரமபுரம், ஐராவத க்ஷேத்திரம், இரத்தினபுரம், பில்வாரணியம், சம்பகாரணியம், என்றும், இக்கலியுகத்தில் மாலதிக்ஷேத்திரம், மாலதீபுரம், மாலதிவனம், யூதிகாபுரம், வடதிருமுல்லைவாயில் என்றும்;

பெருமானுக்குக் கிருதயுகமுதல் துவாபரமிறுதிவரையும் பிரமநாதேசுவரர், இரத்நேசுவரர், இரத்நபுரீசுவரர், வில்வேசுரர், பசுபதீசுவரர் என்றும், இக்கலியில் அகளங்கரத்நேசுவரர், நிர்மலமணீசுவரர், சுமத்யாபதீசுவரர், மாசிலாமணீசுவரர் என்றும்;

அம்பிகையாருக்குச் சென்ற மூன்று யுகங்களிலும் கிர்துஷ்டாரத்னநாயகி, சித்ரமத்தியாநாயகி, சுமத்யாநாயகி, பிரமநாதநாயகி, மனோபிரமணீநாயகி, சாந்தமத்தியாநாயகி யென்றும், இவ்யுகத்தில் அகளங்கரத்நநாயகி மாலதீவனநாயகி, யூதிகாபுரநாயகி, இலதாமத்யாம்பிகா, கோடியிடையம்மை என்றும்;

தீர்த்தங்களுக்குள் முன் மூன்று யுகங்களில் கோயிற்குக் கிழக்கிலுள்ள திருக்குளத்திற்குப், பிரமதீர்த்தம், ஐராவததீர்த்தம், இரத்தினதீர்த்தம், சித்திதீர்த்தம், என்றும், கலியில் கலியாணதீர்த்தம், சுப்பிரமணியதீர்த்தம் என்றும்; புராணத்துட் பெயர்கள் கூறியிருக்கின்றன.

மற்றும் புராணத்துள் கூறியுள்ள பதுமதீர்த்தமென்னும் இந்திரதீர்த்தத்தை இப்போது செங்நெற்குட்டையென்றும், அக்கினிதீர்த்தத்தைப் பரமனேரியென்றும், இயமதீர்த்தத்தைத்

தச்சன் குட்டையென்றும், நிருதிதீர்த்தத்தைத் திருமஞ்சனக் குட்டையென்றும், வருணதீர்த்தத்தைக் கருமான் குட்டையென்றும், குபேரதீர்த்தத்தை வாழைக்குளமென்றும், வழங்கி வருகின்றார்கள். வாயு ஈசானதீர்த்தங்கள் இவ்விடத்தில் இன்ன பெயருட னிருக்கின்றனவென் றுணரப்போகவில்லை.

இவையன்றிச் சூரிய சந்திரதீர்த்தங்க ளொன்றிரண்டுண்டு. அவை நகருக்குத் தக்ஷிணத்தில் மன்னுத சுவாமிமரகதாசலவம் மையார் சந்நிதிக்குக் குடபாரிசமாக விருக்கின்றன. பிற்காலத்தில் அவை ஒரேதீர்த்தமாகச் சேர்க்கப்பட்டு இளமங்கை தீர்த்தமெனச் சின்னாள் வழங்கி, இப்போது தாமரைக்குளமெனக் காரணப்பெயரைச் சூடி நிற்கின்றது.

மூர்த்திதலதீர்த்த விபவங்களுடைய இந்த க்ஷேத்திர புராணம் பதினெண்புராணங்களுள் பவிஷியபுராணத்தின் உத்தர பாகத்தில் சிவக்ஷேத்திரகண்டத்தில் மார்க்கண்டேய சம்மிதையில் மத்தியபாகத்தில் அம்பிகையாருக்குச் சிவபெருமானே உபதேசித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தலத்தில் பிரம தேவர் வழிபட்டுப் பெருமானுக்கு விழாவெடுத்ததாயும், குமாரக் கடவுள் தேவஸேனுதிபத்தியம்பெறுமாறு பூசித்து வரமடைந்ததாயும், பிருகு முனிவர் துவாதசவருடக்ஷாமம் நிவர்த்தியாம்படி வழிபட்டு இரத்தினவருஷம் வருஷிக்க அனுக்கிரகம் பெற்றதாயும், வசிட்டமுனிவர் யாகசம்ரக்ஷணத்தின்பொருட்டு வழிபட்டுக் காமதேனுவைப்பெற்றதாயும், சந்திரன் தாராசங்கமதோஷ நிவாரணத்தின்பொருட்டுப் பூசித்தருளடைந்ததாயும், அசுவனி முதலிய நாண்மீன்கள் தமது நாயகனான சந்திரன் விஷயமாக அபசாரப்பட்ட பாபவிமோசனமாம்படி அம்பிகையாரை வழிபட்டுய்ந்ததாயும், சூரியன் தக்கயாகத்தில் சிவநிந்தைகேட்ட தோஷநிவர்த்திக்காக வழிபட்டு இழந்த கண்ணையும் அடைந்ததாயும், குசலவர்கள் தமது பிதா இராமபிரானிடம் எதிர்த்துச் செய்யாதன செய்த அபராத க்ஷமைக்காக வழிபட்டுய்ந்ததாகவும், துர்வாசமகருஷி இந்திரனிடங் காட்டிய கோபத்தால் விளைந்த பாவத்தைப் போக்கிக்கொள்ள வழிபட்டதாயும், சிவப்பிரகாசத்தை அவமதித்த ஐராவதம் அப்பாவம்

ஷோமாறு பூசித்து அச்சாபத்தைப் போக்கிக்கொண்டதாயும், இந்திராணி தனது கணவன் பிறர் கண்களுக்குப் புலப்படாமல் கரந்துறைய சேர்ந்த தோஷம் போமாறு அம்பிகையாரை வழிபட்டதாயும், அப்போது வெளிப்போந்த இந்திரன் சுவாமியை வழிபட்டு உற்சவம் செய்வித்ததாயும் இந்தக்ஷேத்திரத்தில் பிரதோடம் சுக்கிரவாரம் மஹோதய அருத்தோதய முதலிய விசேடதினங்களில் செய்யும் சிவ புண்ணியங்கள் இந்தப் பலலைத் தருமென்பதாயும் தேவமித்திரனென்னும் ஆசாரவீனனுனவிப்பிரன் அபுத்தியாற் செய்த புண்ணியத்தாற் கதியடைந்ததாயும் சம்புதாஸர் என்னும் அடியவர் ஸத்கைங்கரியஞ் செய்து முத்தியடைந்ததாயும், சித்திர கர்மனென்னும் அந்தணன் அபுத்தி பூர்வமாய்ச் செய்த கைங்கரியத்தால் பரமபதமடைந்ததாயும், இக்கலியில் ஆதொண்டசக்கிரவர்த்தியாரை வலிந்தாளத் திருவுளங்கொண்ட சிவபெருமான் முல்லைப்புதருளிருந்தபடி அவரேறிய யானையைத் தகைந்து அவரால் வெட்டுபட்டும் நிர்மலமணிசுவாராய் அவருக்கு முத்தியைப்பாலித்ததாயும், கூறியிருக்கின்றது. இத்தலத்தைப் பற்றிய வேறு துதிநூல்களில் விஷ்ணு அருச்சுனன் முதலிய பலரும் வழிபட்டதாகவும் கூறியிருக்கின்றன.

இத்தகைய விபவங்களின் விவரங்களையும், சந்நிதி அந்தராளமண்டபத்தில் எருக்கந்தூணிரண்டமைத் திருப்பதற்கும், நந்திதேவர் ஏனையதலங்களைப் போலாதுபுஷ்டபாகங் காட்டிநிற்பதற்கும், அம்பிகையார் வலமாக எழுந்தருளியிருப்பதற்கும் காரணங்களையும் அந்த க்ஷேத்திரத்திலுள்ள ஷை தேவஸ்தானம் ஸ்தானீகர் ஸ்ரீமத் நாகேசுவர சிவாசாரியாரிடமிருந்த வடமொழிப்புராணத்தின்படி பிரசங்க சூளாமணி. க. வ. திருவேங்கட[illegible]யடவர்கள் தமிழில்மொழிபெயர்த்து அச்சிட்ட வசனரூபப் புராணமும்; வித்வான். திருமயிலை-சண்முகம் பிள்ளையவர்கள் செய்தச்சிட்ட செய்யுள்ரூபப்புராணமும் நன்கு விளக்கும். ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளாற் றிருப்பதிகம் பெற்றுள்ளது.

இது

மேர்தூர் - சண்முகமுதலியாரா லியற்றப்பெற்றது.

23

2A

உ

சிவமயம்.

திருவிடை, வடிவுடை, கொடியிடை

என்னும்

முச்சக்திகளின் விபவம்.

திலக நன்னுதற் றிருவிடை
மலம றுத்திடும் வடிவுடை
குலவு தாயெனுங் கொடியிடை
கலந்தவர்க் கிலை கருவிடை.

பொன்னேரிக்கடுத்த மேலூரி லெழுந்தருளியிராநின்ற ஸ்ரீ திருவிடைநாயகியாரையும், திருவொற்றியூரி லெழுந்தருளியிராநின்ற ஸ்ரீ வடிவுடையம்மையாரையும், வடதிருமுல்லைவாயிலி லெழுந்தருளியிராநின்ற ஸ்ரீ கொடியிடை நாயகியாரையும், ஆடி, கார்த்திகை, தை முதலிய மாதங்களில் வரும் சுக்கிரவாரங்களில் காலையிலொன்றும், உச்சியிலொன்றும், மாலையிலொன்றுமாக முறையே மூன்று சக்திகளையும் தரிசிக்கப்பெற்றவர்கள் இம்மையில் புத்திரப்பேறுமுதலிய பாக்கியங்களை யாதொரு விடையூறுமின்றி யடைவதுடன் முடிவில் பேரின்பவாழ்வை யடைவார்களென்பது திண்ணமெனப்பெரியோர்களால் கூறப்பட்டபடி நாளதுவரையில் நடந்துவருகின்றது.

வஞ்சிவிருத்தம்.

மாசி லாமணி மன்னனை
யாசி லாத்துதி யாற்றினுற்
காசு லாம்வினை கழன்றிடத்
தேசு லாம்வரந் தேர்வரே.